STC.No. 211/2025
நாள் 20.08.2025.
P.W.1 – (சூசைமரியான் )
எதிரி ஆஜர்.
எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

**1.** எனக்கு எழுத படிக்க தெரியும். நான் தற்சமயம் விவசாயம் பார்க்கிறேன். எனக்கு விவசாய நிலங்கள் இருக்கிறது. எனக்கு முதல் மனைவிக்கு 1 குழந்தை 2ம் மனைவிக்கு 1 குழந்தை. என் முதல் மகன் எம்.பி.ஏ. படித்துள்ளார். 2வது மகள் 4 வயதாகிறது. என் மனைவி வேலை பார்க்கிறாரா என்றால் இல்லை. எனக்கு விவசாயம் தவிர்த்து வேறு வருமானம் இல்லை. எதிரி என் பக்கத்து வீட்டுகாரர். எதிரி சொந்த ஊர் மம்சாபுரம். எதிரி ஸ்ரீவில்லிபுத்தூரில் சொந்த வீட்டில் வசிக்கிறார். எதிரியின் மனைவி வீட்டில்தான் உள்ளார், வேலை பார்க்கவில்லை. எதிரி அரசு மருத்துவமனையில் பல் மருத்துவராக வேலை பார்க்கிறார். நான் இந்த நீதிமன்றத்தில் பல நபர்களுக்கு எதிராக காசோலை மோசடி வழக்கு நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. எதிரி மீது பல காசோலை மோசடி வழக்குகள் இந்த நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது என்றால் எனக்கு தற்போது தான் தெரியும். 20.02.2024 அன்று எதிரி என்னை சந்தித்ததாக சொன்ன தேதியில் எதிரியுடன் யார் வந்தார்கள் என்றால் எதிரி மட்டும் தான் வந்தார். என் வீட்டில் என் மாமியார் வேளாங்கண்ணி வசிக்கிறார். என் மனைவி என் மகன் மற்றும் என் மகள் இருந்தார்கள். நான் வருமான வரி தாக்கல் செய்கிறேனா என்றால் தீப்பெட்டி தொழிற்சாலை நடத்தி வந்த வரை வருமான வரி செலுத்தினேன். தற்போது எந்தவிதமான வருமானமும் இல்லை அதனால் செலுத்தவில்லை.

2. நான் ரூ.1,60,000/– கொடுத்ததாக சொல்லும் தொகை எனக்கு எப்படி கிடைத்தது என்றால் என்னுடைய சேமிப்பு மற்றும் விவசாய வருமானம் ஆகும். 20.02.2024 என்ன கிழமை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அன்று மாலை 6 மணிக்கு எதிரி என்னை சந்தித்தார். எனக்கு 20.02.2024 அன்றே எதிரி பின் தேதியிட்டு கொடுத்தார். நான் எதிரியிடம் பணம் கேட்டதாக சொல்லும் தேதிகள் என்னால் சொல்லமுடியும் என்றால் நான் தினமும் செல்வேன் தேதி குறிப்பிட்டு சொல்ல முடியாது. நான் புகார் மனு, நிருபண வாக்குமுலம் ஆகியவற்றில் எதிரியிடம் இறுதியாக பணம் கேட்டதாக சொல்வது எந்த தேதியில் என்று உறுதியாக சொல்ல முடியுமா என்றால் ஞாபகம் இல்லை. நான் எதிரிக்கு வட்டிக்குதான் பணம் கொடுத்தேன். எவ்வளவு வட்டி என்றால் வட்டி தருவதாக எதிரி சொன்னார். 2 சதவீதம் தருவதாக சொன்னார். என் புகார் மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் நான் எதிரிக்கு வட்டிக்கு பணம் கொடுப்பதாக மாத வட்டி 2 சதவீதம் என்று குறிப்பிட்டு சொல்லியிருந்தேன் என்றால் இல்லை. நான் காசோலையை 20.06.2024 அன்று வசூலுக்கு தாக்கல் செய்தேன். வங்கியில் இருந்து ரிட்டன் மெமோ கொடுத்தார்கள். நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாக சொன்ன தேதி சொல்ல முடியுமா என்றால் ஞாபகம் இல்லை. நான் அனுப்பியதாக சொல்லும் அறிவிப்பை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. அந்த அறிவிப்பு என்னிடம் இருக்கும் என்றால் என் வழக்கறிஞரிடம் கேட்டு நான் தாக்கல் செய்ய தயாரா உள்ளேன்.

3. அந்த காசோலை திருப்பப்பட்ட வங்கி குறிப்பாணை மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பு ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் என் வழக்கிற்கு பாதகமாக அமையும் என்பதால் நான் தாக்கல்செய்ய இல்லை என்றால் அந்த காசோலையை திரும்ப வாங்கி கொண்டுதான் இந்த வழக்கு காசோலை கொடுத்தார். அந்த காசோலை

மற்றும் ரிட்டன் மெமோ என்னிடம் இருந்து வாங்கவில்லை என்றாலும் என்னிடம்தான் உள்ளது என்றாலும் சரியல்ல. என்னிடம் வாங்கியதாக சொல்லும் தொகை ரூ.1,60,000/– என்னிடம் இரண்டாவதாக பெற்ற காசோலை ரூ.2 லட்சம் என உள்ளது என்றால் எதிரியாகவே செலவு தொகை மற்றும் வட்டி சேர்த்து ரூ.2 லட்சம் என காசோலை கொடுத்தார். வட்டி 2% வழக்கறிஞர் செலவு மற்ற செலவுகள் சேர்த்து ரூ.40,000/–. 07.10.2024 அன்று என்ன கிழமை என்று எனக்கு தெரியாது. 07.10.2024 காசோலையை என் வீட்டில் வைத்து கொடுத்தார். அவ்வாறு என் வீட்டில் வைத்து கொடுத்தார் என நிரூபண வாக்குமூலம் மற்றும் புகார் மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. 07.10.2024 காசோலை கொடுத்ததாக சொல்கிறேன். பின்னர், ஏன் 04.01.2025 அன்று காசோலை வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் எதிரி பொறுக்க சொன்னார் தொகை குறைவாக இருப்பதாக சொன்னார் நான் அந்த விபரத்தை புகார் மனு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு தெரியாது.

4. எதிரி தற்போது கோதை நகரில் குடியிருப்பதாக தகவல். எவ்வளவு நாட்களாக அங்கு குடியிருக்கிறார் என்று எனக்கு தெரியாது. எதிரி அறிவிப்பை பெற்றுக் கொண்டாரா என அஞ்சலக ஒப்புகை அட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் ஆம். பு.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பில் வழக்கறிஞர் கையொப்பம் செய்யும் இடத்தில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரி. பு.சா.ஆ.3 சட்ட அறிவிப்பு எதிரிக்கு கிடைத்ததா, இல்லையா என தெரியாது என்றால் எதிரிக்கு சட்ட அறிவிப்பு கிடைத்தது. நான் 3ம் நபர்களுக்கு பினாமியாக காசோலைகள் பெற்று வழக்கு தாக்கல் செய்வது என் தொழில் என்றால் சரியல்ல. நான் இதே தொழிலை கடந்த 5 வருடங்களாக இதே நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன். எதிரி வேறு 3ம் நபர்களுக்கு கொடுத்த காசோலையை நான் வாங்கி பினாமியாக இந்த பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 20.02.2024 மற்றும் 07.10.2024 ஆகிய தேதிகளில் எதிரி என்னை சந்தித்து காசோலை வழங்கவில்லை என்றாலும் 20.02.2024 அன்று எதிரி என்னிடம் எந்த பணமும் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. 20.02.2024 மற்றும் 07.10.2024 ஆகிய தேதிகளில் எதிரி அரசு மருத்துவமனையில் வேலை பார்த்து வந்தார் என்றாலும் வெளியூருக்கு சென்றிருந்தார் என்றாலும் என்னை சந்திக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி மீது நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எதிரிதான் என் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது என்றால் சரியல்ல.

5. எனக்கு எதிரிக்கு பணம் கொடுக்கும் அளவிற்கு போதுமான வசதி வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. என் புகார் மனுவில் வழக்குமூலம் குறிப்பிடவில்லை என்றாலும் அதனால், என் புகார் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.